

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நேற்று (6.8.2023) நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழகத்தின் 165வது பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ள வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்றார். உடன், தமிழ்நாடு ஆளுநரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான ஆர்.என். ரவி உள்ளார்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் - வெடிமருந்து தொழிற்சாலை விபத்தில் காயமடைந்து

# சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்- நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 7–

புதுக்கோட்டை மாவட்டத்தில் 30.7.2023 அன்று வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்த அறிக்கை வருமாறு:–

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான வெடிமருந்து தொழிற்சாலையில் கடந்த 30.7.2023 அன்று ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஐந்து நபர்களில் கோவில்பட்டியைச் சேர்ந்த வீரமுத்து, (த/பெ. கருப்பையா) (வயது 31) என்பவர் 3.8.2023 அன்றும், திருமலை, (த/பெ. ஆறுமுகம்) (வயது 30) என்பவர் 4.8.2023 அன்றும், வெள்ளனூரைச் சேர்ந்த சுரேஷ், (த/பெ. பழனி) (வயது 35) என்பவர் இன்றும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வைரமணி, மற்றும் குமார் ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இருவருக்கும் தலா 1 இலட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலை அறிவுச் சுடர் கலைஞர்!

தலைவா உம்மை நினைத்தாலே,
சிலிர்க்கும் எங்கள் நெஞ்சமெல்லாம்;
திமிரும் எங்கள் உணர்ச்சிகளும்,
நிமிரும் தமிழ்நாட்டு அரசியலும்;

தலைவா உந்தன் ஆட்சியிலே,
தலை நிமிர்ந்தது தமிழ்நாடே,
தமிழ் இனத்தின் மாண்புகளும்,
நிலை உயர்ந்தது உன்னாலே;

முன்னூறு நூற்றாண்டு
பண்பட்ட தமிழகத்தின்,
அரசியல் முகவரி நீ;
திக்கெட்டும் வாழ்ந்துவரும்
தமிழர்களின் நெஞ்சங்களில்,
உணர்வுகளில் கலந்தவன் நீ;

கோபுரத்தை மட்டுமே உயர்த்திக் கட்டி,
பாமரர் பார்வையில் அதனையே காட்டி,
அவனே அறியா வண்ணம்
உரிமைகளைச் சுரண்டி, - சொகுசாய்
வாழும் சனாதினிகள் மத்தியில்,
ஜாதியின் பெயரால் பின்தங்கியோரை
உயர்த்திக் காட்டிய உத்தமன் நீ;

அனைவரும் சமம் எனச்சொல்லி
சமத்துவப் புரம் அமைத்தாய்;
குடிசைகளற்ற தமிழகம் காண
அடுக்குமாடி வீடுகள் தந்தாய்,
பல்லக்கு தூக்கும் நிலை போலிருந்த
கைரிக்சாவை ஒழித்தாய்;
மறுமண உதவி, உழவர் சந்தை,
மருத்துவ காப்பீடு உம்மால் கிடைத்தது


தலைவா உன் வாய்மலர்ந்தால்,
செந்தமிழ் தேன் பொழியும்,
தமிழன்னை துள்ளல் நடையில்
சிந்தனை விருந்து வைப்பாள்,
எனவேதான் நீ முத்தமிழ் முகவரி ஆனாய்;



உன் பேனாவே எதிரிகளை பணிய வைத்தது,
அதனாலே எதிரி நெஞ்சம் பதபதைக்கிறது;

பன்முக நாயகன் நீ,
பல்கலை அறிவுச்சுடர் நீ,
நீ தொட்ட துறைகளில் எல்லாம்,
முன் நிற்கும் முதல்வன் நீ ;

போர்குண நாயகன் நீ ; எதற்கும் அசராத மலை நீ;
உன்மீது மோதி சிதறிய
அரசியல் சூறாவளிகள்,
உம்மை பணிந்த எதிர்கட்சி சுனாமிகள், விமர்சனகனைகளும் திசைமாறி சென்றதுவே;
ஓய்வில்லா உழைப்பாளியே;
உன் மீது இரக்கம் கொண்டு
பூமித்தாய் அணைத்துக் கொண்டாள்;
உனக்கு ஓய்வளிக்க;



**எம்.ஜாகீர் உசேன்**

# சூரியனைத் தேடும் சூரியகாந்திப் பூக்கள்



நமது கடற்கரை நோக்கி ஓர் கண்ணீர் ஊர்வலம் புறப்படுகிறது.
ஓ... தமிழ் சாதியின் தானைத் தலைவனே.
திருக்குவளை ஈன்ற திராவிடர்களின் தீர்க்கதரிசியே.
பெரியாரும் பேரறிஞரும் போற்றி வளர்த்த பைந்தமிழ் ஞானியே :
கிரீடங்கள் கீழே உருண்டாலும் கீர்த்திகளை இழக்காதவன் நீ!
வெண்கொற்றக் குடை வீழ்ந்தாலும், விபிடணனாகச் சரணடையாதவன் நீ!
சூறாவளியே சுழன்றடித்தாலும், கழகக் கப்பலைக் கரை சேர்த்தமீகாமன் நீ!
பூகம்பங்களே பூத்து உதிர்ந்தாலும் உன் கொள்கைகளைப் புதைத்து விட முடியாது.
எரிமலைகள் குமுறி எச்சரிக்கை செய்தாலும், உனது இலட்சியத்தை மாயான பூமியாக்க இயலாது.
நீ வீசிய முத்துக்களை வீழ்ந்து பொறுக்கிய வீரர்கள் நாங்கள்
நீ பேசிய தத்துவங்களைத் தூக்கித் திரிந்த தூதுவர்கள் நாங்கள்.
நீ செதுக்கிய சித்தாந்தங்களிலும், வேதாந்தங்களிலும், விவரம் சேகரித்த தேனீக்கள் நாங்கள்.
எங்களின் இனிய அரசனே... இராஜபாட்டையில் ஊர்வலம் வந்த இலட்சிய வேந்தே..
உன் நிசப்தம்..........அரசியல் உலகில் இருட்டை விதைத்து உள்ளது.
தேர்தலினால் தி.மு.கழகத்தை எதிரிகளால் தேய்த்து விட முடியாது.
புல்லுருவிகளால் புல்லாங்குழல் இசையைத் தடுத்துவிட முடியாது.
நீ.....கருத்துக்கள் கொட்டிய அமுதசுரபி அல்லவா!
நீ.....ஞானபிரசங்கம் செய்த வைரச் சுரங்கம் அல்லவா!
உனது எழுதுகோலுக்கு ஏன் இடுப்பு வலியை ஏற்படுத்த மறந்தாய்?
உன் மௌனத்தால் பத்திரிகைகள் எல்லாம் பாலைவனமாகவே காட்சியளிக்கிறது.
எங்களின் இதயங்களைத் திருடி நாள்தோறும் உழுது, உழுது சுயமரியாதையை விதைத்தோனே .
சூரியகாந்திகளான எங்களுக்குச் சுபிட்சம் வழங்கிய சுடரொளியாதவனே...
தறி கேட்டுத் தடுமாறி போய்விடாமல் மந்தை ஆடுகளான எங்களை மேய்த்தோனே ....
உத்தமர்களை உதறிவிட்டு ஊழல்வாதிகளுக்கு ஊஞ்சல் கட்டி உற்சவம் நடத்திய காலங்கள் எல்லாம் தமிழகத்தில்......
எதிரிகளிடமும், துரோகிகளிடமும் பாவப்பட்ட ஆடுகளாய் பலிபீடம் ஏறினோம்.
அருமை பெருமை வெற்றிகளைக் குவித்து அலெக்சாண்டரும்....
நெஞ்சம் குலையாத நெப்போலியனாய் கழகத்திற்கு இருந்தவன் நீதானே!
கழகத் தலைவனே தேர்தலில்சில காலங்களில் காயப்பட்டது. கழகம் அல்ல .தமிழகம் தானே!
இதோ பயிற்சி பெற்ற உனது படை வரிசை சிப்பாய்கள்... ஆயுதங்களை இழக்காமல் அப்படியே இருக்கிறார்கள்.
உனது வருகைக்காக விழி வாசல்களில் விளக்கேற்றித் திறந்தே வைத்திருக்கிறார்கள்..
நீ சரித்திரத்தையே சாதனையாய் செதுக்கியவன்.
உன் செல்வக்களஞ்சியத்தில் பெரியாரும், அண்ணாவும் பத்திரமாகவே பாதுகாக்கப்பட்டார்கள்.
ஆள்பவரைக் காட்டிலும் ஆளப்படும் மக்கள் முக்கியம் என முரசு கொட்டியவன் நீ!
உன் பொன் உதடுகளில் இருந்து உதிர்ந்த ஒவ்வொரு வார்த்தையும் மக்களை நோக்கியே தொலைநோக்குத் திட்டங்களாக உருவெடுத்தன.
நீ சாமானிய மக்களுக்காகச் செங்கோலைச் சுழற்றி கம்பீரமாக ஊர்வலம் வந்தவன்.
இரவிதேவனைக்கூட இரவு படுக்கையில் அயர்ந்து விடாமல் இருக்க. நாள்தோறும் உன் எழுதுகோலால் சீண்டித் துயில் எழுப்பியவன் நீ!
நீ பாலைவனத்திலும், சோழவனத்திலும் கழகக் குழந்தையைத் தூக்கி சுமந்து சுகவலி அனுபவித்த சூரியத் தாய்.
நீ இலையுதிர் காலத்தில் லட்சியத்தை மாற்றிக் கொள்ளாத இராஜாளிப் பறவை அல்லவா?
வசந்த காலத்திலும் மசக்கையா இருந்து விடாத மின்சார மனிதனின் நீ!
கொடியையும், கொள்கையையும், அடகு வைத்து கோமாளி வாழ்க்கை நடத்திய சில நட்சத்திர மனிதர்கள் மத்தியில் நீ மட்டும் பாதை மாறாத பகலவனாய் வலம் வந்தவன்....
உன்னால் முகவரி பெற்றவர்கள் தேர்தல் கள வீதிகளில் உன் மீது பூமராங் சொற்களை வீசியபோது அவைகளைப் பிடித்துக் பூச்செண்டுகளாகவே ஏற்றுக் கொண்டவன் நீ!
உன்னைக் காயப்படுத்திட துரோகிகள் வீசிய கற்களை வைத்தே அறிவாலயத்திற்கு அரண் அமைத்தவன் நீ!
நீ உன் அழுக்கு மனிதர்களை துவைத்த சலவை கல்லாகவே இருந்தாய்..
மனித மனங்களுக்கு கூர் தீட்டும் ஒரு சாணைக்கல் என்றால் அதுவும் கலைஞர் எனும் நீ தானே...
நீ எழுதுகோல் எடுத்த போதெல்லாம், எதிரிகளின் கொடுங்கோல் முறிந்து, செங்கோல் நிமிர்ந்து நின்றது.
இன்று உனக்கு தமிழ்நாடு முழுவதும் நூறாண்டு விழா எடுப்பதில் முத்துவேலரின் பேரன் முகவரி எழுதிக் கொண்டிருக்கிறார்.
இன்றோ உன் நினைவு நாள்... நாங்கள் கண்ணீரில் மிதக்கும் துயர நாள்....
ஆம்; தளபதி தலைமையில் கழகப்படை திரண்டு வருகிறது. கடற்கரை நோக்கி உனது கல்லறை நனைக்க கண்ணீர் ஊர்வலம் வருகிறது.

**கவிஞர்**
**தமிழ்தாசன்**
*தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்*



### அமீரக தி.மு.க. பொறுப்பாளரும் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான

# எஸ்.எஸ்.மீரானை விருது வழங்கி கவுரவித்த இந்திய தூதரகம்!

## சமூக சேவைக்கு கிடைத்த அங்கீகாரம்!

*துபாய்,ஆக.7-*

அமீரக திமுக பொறுப்பாளரும், தமிழக அரசின் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான எஸ்.எஸ். மீரானின் சமூக சேவையை பாராட்டி துபாயில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

துபாயில் உள்ள இந்திய தூதரகத்தில் கடந்த ஆகஸ்ட் 1ஆம் தேதி நடைபெற்ற விழாவில் இந்திய தூதர் (பொறுப்பு) ராம்குமார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தொழிலாளர் விவகார செயலாளர் அப்துல்லா லஷ்காரி ஆகியோர் இந்த விருதை வழங்கினர்.

பணி நிமித்தமாக ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்று அங்கு பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டவர்கள், போலி ஏஜெண்ட்கள் மூலம் துபாய்க்கு சென்று அங்கு ஊதியமும், சாப்பாடு கிடைக்காமல் தவித்தவர்கள் என பலருக்கும் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர் என்ற முறையில் எஸ்.எஸ்.மீரான் உதவிக்கரம் நீட்டி வருகிறார்

அதுமட்டுமல்ல துபாயில் உயிரிழக்கும் தமிழ்நாட்டை சேர்ந்தவர்களின் உடல்களை சொந்த ஊருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் இந்திய தூதரகம் மற்றும் தமிழக அரசு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறார்.

துபாயில் உள்ள இந்திய தூதரகம் தன்னார்வமாக சமூகநலப் பணிகளில் இந்தியாவை சேர்ந்தவர்கள் ஈடுபடுவதன் மூலம் துபாயில் உள்ள இந்திய தூதரகத்தின் பணிச்சுமை குறைவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இவ்விழாவில் அமீரகத்தில் உள்ள பல்வேறு இந்திய முக்கிய பிரமுகர்களும், தொழிலதிபர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்

மேலும் எஸ் எஸ் மீரான் அவர்களுக்கு கடந்த மே மாதத்தில் நியூஸ் 7 செய்தி சேனலில் எழுமின் விருது சமூக சேவைக்காக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது